அனுப்புநர்
திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்
செய்தி ஆசிரியர்,
அனைத்து ஊடகங்கள்

ந.க.எண். 000233 /NMMS /2022 நாள் : 11.01.2022

ஐயா/அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்பு உதவித் தொகை திட்டத் தேர்வு **(NMMS)** மார்ச்–2022 – விண்ணப்பங்கள் வரவேற்பது – செய்தி வெளியிடக் கோருதல் – சார்பு.

-----

2021–22–ஆம் கல்வியாண்டில் எட்டாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்பு உதவித் தொகை திட்டத் தேர்வு, **05.03.2022 (சனிக்கிழமை )** அன்று நடைபெற உள்ளது. இத்தேர்விற்கு எட்டாம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்கள் விண்ணப்பிக்கும் பொருட்டு அதன் தொடர்பான செய்தி அறிவிக்கை இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. இச்செய்தியினை பொதுமக்கள் அறியும் வகையில் தங்கள் பத்திரிக்கையில் செய்தியாக வெளியிடுமாறும் வானொலி / தொலைக்காட்சியில் ஒலி / ஒளி பரப்பிடுமாறும் கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**“இது விளம்பரம் அல்ல”** எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒம்/–
இயக்குநர்

இணைப்பு :
செய்திக் குறிப்பு

<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006</u>

<u>தேசிய வருவாய்வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகை திட்டத் தேர்வு, 2022</u>

## NATIONAL MEANS CUM MERIT SCHOLARSHIP SCHEME EXAMINATION (NMMS)

<u>செய்திக் குறிப்பு</u>

2021–2022-ம் கல்வியாண்டில் அங்கீகாரம் பெற்ற அரசு / அரசு உதவி பெறும் / மாநகராட்சி / நகராட்சி / ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் எட்டாம் வகுப்பு மாணவர்கள், 2022 மார்ச் மாதம் 05–ஆம் தேதி (சனிக்கிழமை) நடைபெறவுள்ள தேசிய வருவாய்வழி மற்றும் திறன் படிப்புதவித் திட்டத்தின் கீழ் படிப்புதவித்தொகை தேர்விற்கு **(NMMS)** விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்படுகிறது.

தேசிய வருவாய்வழி மற்றும் திறன் படிப்புதவித் திட்டத்தின் கீழ் படிப்புதவித்தொகை எட்டாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. உதவித் தொகை வழங்க மாணவர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு **NMMS** தேர்வு அனைத்து வட்டார அளவில் (Block Level) தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு தேர்வு நடைபெறவுள்ளது. **தேர்வு தேதி 05.03.2022 (சனிக்கிழமை).** இத்தேர்விற்க்கான வெற்று விண்ணப்பங்களை **12.01.2022** முதல் **27.01.2022** வரை இத்துறையின் www.dge.tn.gov.in என்ற இணையதளம் வழியாக பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் தேர்வுக் கட்டணத் தொகை ரூ.50/– சேர்த்து , தாம் பயிலும் பள்ளித் தலைமையாசிரியரிடம் சமர்ப்பிக்க வேண்டிய **கடைசி நாள் 27.01.2022.** மேலும் காலஅவகாசம் நீட்டிக்கப்படமாட்டாது.

**பொதுவான அறிவுரைகள்:**

- தேர்வர்கள் (NMMS) தேசிய வருவாய்வழி மற்றும் திறன் படிப்புதவித் திட்டத் தேர்விற்கு விண்ணப்பிக்க தங்கள் பள்ளிக்கு வரும்பொழுது கட்டாயம் முககவசம் (Mask)அணிந்து வரவேண்டும்.
- போதிய சமூக இடைவெளி கடைப்பிடிக்க வேண்டும்.

மேலும் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் கூடுதல் விவரங்களை அறியலாம்.

ஒம்/–
இயக்குநர்

நாள். 11.01.2022
சென்னை–600 006.